**தலைப்பு 315 – வட மாகாண சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

---

## 1. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் பிரதான செயற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

வட மாகாண மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு சிறந்த நல்லாளுகையின் முறையான அமுல்ப்படுத்தல் ஊடாக நிலைபேறான அபிவிருத்தியுடன் சௌபாக்கியத்தினை அடைவதனை நோக்கமாகக் கொள்ளல்.

### 1.2 பணிக்கூற்று

வட மாகாண மக்களை இலக்காகக் கொண்டு உட்கட்டமைப்பு சேவைகளையும் வசதிகளையும் புனரமைத்து மீளச்செயற்படுத்துதல் மற்றும் மனித வள இயலளவுகளை அபிவிருத்தி செய்தல் என்பவற்றின் மூலம் வாழ்வாதாரத்தை மீள நிறுவுதல்.

### 1.3 பிரதான செயற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடு என்பவற்றின் பிரகாரம் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்.

## 2. ஒதுக்கீட்டுக் கணக்கு

### மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

வட மாகாண சபைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 25,240.24 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 23,791.27 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, சேமிப்புக்களானது மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 1,448.97 மில்லியன் அல்லது 5.74 சதவீதம் ஆக காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 17,077.53 | 17,077.53 | - | - |
| மூலதனம் | 8,162.71 | 6,713.74 | 1,448.97 | 17.75 |
| **மொத்தம்** | **25,240.24** | **23,791.27** | **1,448.97** | **5.74** |

### 3. கணக்காய்வு அவதானிப்பு

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு அதற்கிணங்க பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.